பி.செ.எண் : 10 பத்திரிக்கை செய்தி குறிப்பு நாள் : 4/8/2017

## மணல் லாரி உரிமையாளர்கள் கவனத்திற்கு.

தமிழ்நாடு அரசின் மணல் இணைய சேவையில் (TNSand) மேற்கொள்ளப்படும் வாகனப் பதிவுகளில் எழும் முறைகேடான பதிவுகளை தவிர்க்கும் பொருட்டு வாகன ஆவணங்களை சரிபார்த்தலுக்கான சிறப்பு முகாம் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 07.08.2017 முதல் 11.08.2017 வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை வட்டார போக்குவரத்து அலுவலர்களால் நீலகிரி மாவட்டத்தில் (*) இடத்தில் நடத்தப்பெற உள்ளது. வாகன உரிமையாளர்கள் www.tnsand.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவத்தில் தங்கள் வாகனத்தின் நடப்பிலுள்ள் வாகன பதிவு புத்தக விபரம் (RC Book), வாகன அனுமதிச் சான்று (Permit), வாகன தகுதிச் சான்று (FC), சாலை வரி ரசீது (Road Tax receipt) மற்றும் காப்பீடு விபரங்கள் (Insurance Details) ஆகியவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்து, இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படும் படிவத்துடன் முகாமிற்கு வரவேண்டும். பதிவேற்றிய மேற்காணும் ஆவணங்களுக்கான அசல் சான்றுகளை அவற்றுக்கான நகல்களுடன் சிறப்பு முகாமில் காண்பித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இம்முகாமானது வாகனத் தரவுகளை ஒழுங்குபடுத்த நடைபெறுகிறது. இம்முகாமிற்கு வாகனங்களை கொண்டுவர வேண்டாம். முகாமில் ஆவணங்கள் சரிபார்ப்பு மேற்கொள்ளும் வாகனங்கள் மட்டுமே இணையதள மணல் சேவையினை பயன்படுத்திக்கொள்ள முடியும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் தவறான ஆவணங்கள் கொண்ட வாகனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(*) பொதுப்பணித்துறை - நீர்வள ஆதாரத்துறை மாவட்ட உபகோட்ட அலுவலகம்
அரசு தாவரவியல் பூங்கா சாலை சேரிங் கிராஸ் காம்ப்ளக்ஸ் எதிரில்
உதகமண்டலம்.